பக்கங்கள் எட்டு

Registered as a News Paper in SriLanka

விலை ரூபா 5-00

# வலம்புரி

VALAMPURI

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

அர்ச்சனா ஜுவலர்ஸ்

118, கஸ்தூரியார் வீதி, 176/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(கி-2127)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆனி 10 ஞாயிற்றுக்கிழமை (24-06-2001) தொலைபேசி: 3378 ஒலி: 195

## அரசு-புலிகள் பேசுவதை இராணுவம் எதிர்க்காது

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப்பேச்சுவார்த்தை நடைபெறுவதை இராணுவம் ஒரு போதும் எதிர்க்காது. மாறாக பெரும் மகிழ்ச்சியடைவர்.

இவ்வாறு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்லே கூறியுள்ளார். (8ம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி பேச்சுக்கு அழைத்தால் நாம் செல்லத் தயாராகவுள்ளோம்

### முன்னாள் அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

[கொழும்பு]

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் நாம் அதற்குப் போகத்தயாராக உள்ளோம்.

தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ள அவசரகால நீடிப்புப் பிரேரணைக்கும் நாம் ஆதரவாக வாக்களிக்கவுள்ளோம். இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ்தலைவரும், எம்பியுமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஆளும் கட்சி விட்டு எதிர்க்கட்சி வரிசையில் இருந்தாலும் நாம் அரசாங்கத்தின் ஓர் மாற்றுக்குழுவாகவே பாராளுமன்றத்தில் செயல்படுவோம். இதுவரை நாம் ஐக்கிய தேசியக்கட்சியுடன் எந்த விதமான இணக்கப்பாட்டையும் காணவில்லை. தற்போது எதிர்க்கட்சியில் இருந்தாலும் அவசரகாலச்சட்டத்தை ஆதரித்து வாக்களிப்போம்.

இதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இந்தப்போக்கு அவர்கள் மீண்டும் அரசில் இணைந்துசெயற்படக்கூடியவாய்ப்புகளை அதிகரித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் கருத்துத்தெரிவித்துள்ளன; (வ)

### அரசு - ஐ. தே. கட்சி உறவை சீர்படுத்த

# ஜனாதிபதி-ரணில்சந்திப்பில் முக்கியஆவணம்கையளிப்பு

## இருதரப்பும் இரகசியம் பேணுகின்றன

(நமது அரசியல் நிருபர்)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர்ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் இடம்பெற்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து, ஜனாதிபதி சந்திரிகா ரணில் விக்கிரமசிங்கா விடம் முக்கிய விடயங்கள் அடங்கிய ஆவணம் ஒன்றைக் கையளித்துள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

ரணிலிடம் கையளிக்கப்பட்ட அந்த முக்கிய ஆவணத்தில் இதுவரை காலமும் நோர்வே எடுத்துக்கொண்ட சமாதான முயற்சிகள் தொடர்பான விபரங்கள் அடங்கியிருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அரசு மீது ஐக்கிய தேசியக் கட்சி சமர்ப்பித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அடுத்து எழுந்துள்ள அரசியல் சிக்கலை அவிழ்ப்பதற்குஜனாதிபதி சந்திரிகா ரணில்விக்கிரமசிங்காவை நேற்று முன்தினம் அழைத்துப் பேசியிருந்தார்.

இருவரும் நடத்திய பேச்சுவார்த்தை விபரங்கள் இதுவரைவெளியிடப்படாமல் பரம இரகசியமாக வைக்கப்பட்டுள்ளது; [8ம் பக்கம் பார்க்க]

## பௌத்த பீடாதிபதிகளின் ஆசியுடன் மூன்று இனவாதக்கட்சிகள் கூட்டாக இயங்க முடிவு

(கொழும்பு)

மல்வத்த, அஸ்கிரிய பீடாதிபதிகளின் ஆசியுடன் மூன்று பௌத்த சிங்கள இனவாத அமைப்புகள் இணைந்து கூட்டமைப்பொன்றினை நேற்று உருவாக்கியுள்ளனர்;

சிஹல உறுமய, சிங்கள தேசிய சங்கம், மகாபூமிபுத் (8-ம் பக்கம் பார்க்க)

## 8000 விடுதலைப் புலிகள் கனடாவில் உள்ளனராம்

(கொழும்பு)

பயிற்சிபெற்ற விடுதலைப் புலி உறுப்பினர்கள் சுமார் எண்ணாயிரம் பேர் வரை கனடாவில் தங்கியிருப்பதாக கனேடியா பொலிசாருக்கு கனேடியபுலனாய்வுப் பிரிவினர் தகவல் கொடுத்துள்ளனர். (8ம் பக்கம் பார்க்க]

# ஜே.வி.பி.மத்தியகுழுநேற்றுக்கூடியது முடிவு எதுவும் எட்டப்படவில்லை!

## இரகசிய இடத்தில் கூட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசுமீது ஐக்கியதேசியக்கட்சி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள நம்பிக்கை யில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவளிப்பதா? இல்லையயா? என்று தீர்மானிப்பதற்கு ஜே வி பி யின் அரசியல் பீடம் நேற்றுக்கூடி ஆராய்ந்துள்ளது.

இக் கூட்டம் கொழும்பில் உள்ளகட்சியின்தலைமையகத்தில் நடை பெறுவதாக அறிவித்திருந்த போதும் தற்பொழுது பெயர் குறிப்பிடப்படாத மிகவும்இரகசியமான இடத்தில்கூட்டம் நடைபெறு (8-ம் பக்கம் பார்க்க)

## குடிசன மதிப்பீட்டை பிற்போட முடியாது

### நாணயக்கார தகவல்

(கொழும்பு)

நாடுதழுவிய ரீதியில்நடைபெறவுள்ள குடிசன மதிப்பீட்டு பணிகளை, வடக்கு கிழக்கில் மாத்திரம் பிற்போடமுடியாதென்று குடிசன மதிப்பீட்டுத் திணைக்களத் தலைவர் ஏ. ஜீ.நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அகதிகளுக்கான (8ம் பக்கம் பார்க்க)

### விடுதலைப்புலிகள் மீது தடை

## விதிக்கும்போதுஇல்லாத ஆலோசனை நீக்க ஏன்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது தடைவிதித்தது பொதுஜன ஐக்கிய முன்னனி அரசுதான் அத்தடையை விதிக்கும்போது அரசு எப்மிடம் எந்த விதக் கருத்துக்களையும் கேட்கவில்லை

எனவே புலிகள் மீதான தடையையும் நீக்குவதும் நீக்காமல் விடுவதும அரசைப் பொறுத்ததாகும்;

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பேச்சாளர் கலாநிதி கருணசேன கொடித்துவக்கு புலிகள் மீதானதடை தொடர்பாக கருத்துத்தெரிவிக்கையில் கூறியுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது தடைவிதிக்கும்போது எமமைக்கலந்தாலோசிக்காத அரசு தடையைநீக்குவது தொடர்பாக எமதுகருத்தைக் கேட்கவேண்டிய அவசிய மில்லை என்றும் அவர் தெரிவித்தார்; (வ

## அமைச்சர் பேரியல் அஷ்ரப்மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும்

### மு.கா.கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரசின் தலைமைக்குமாறாக அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுகிற பேரியல்அஷ்ரப் உட்பட நால்வரும் தம்முடன் சேர்ந்து எதிரணியில் அமரவேண்டுமென்று அப்படி இல்லாதுபோனால் அவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கட்சியின் செயற்குழு முஸ்லிம் காங்கிரஸின் அதிஉயர்பீடத்திற்கு சிபார்சுசெய்துள்ளது;

ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரசின் செயற்குழுக் கூட்டம் நேற்றுக்காலை ரவூப்ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது; இக்கூட்டத்தில் நாடு தழுவிய ரீதியில் 300க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்;

இக்குழுக்கூட்டத்தில் முன்னாள் அஷ்ரப் காலமானதை அடுத்து அரசியல் உயர்பீடத்திற்கு நியமிக்கப்பட்ட 7 அரசியல்பீடஉறுப்பினர்களையும் நீக்கவேண்டும்.

தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பில் கூறியுள்ளவற்றின் பிரகாரம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரே தேசிய ஐக்கியமுன்னணியின் தலைவராக இருக்கவேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன; (வ

நடுவே நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இறுதி நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் யா/வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்தப்படும் ''சமுதாயத்தில் ஆண்கள் பெண்களுக்கான சம வாய்ப்பு'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கின் இறுதி நாள் நிகழ்வு இன்று பி.ப. 3.00மணிக்கு சங்கத்தின் யாழ் மாவட்டத் தலைவர் வ. கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதமவிருந்தினராக யாழ் பல்கலைக் கழக வைத்தியபீடப் பீடாதிபதி செல்வி வசந்தி அரசரத்தினமும் கௌரவவிருந்தினராக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி நா.தணிகாசலப்பிள்ளையும், சிறப்பு விருந்தினராக தீவகக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரனும் கலந்து கொள்வார்கள். (ந)

## வருடாந்த மஹோற்சவம்

[யாழ்ப்பாணம்]

சண்டிலிப்பாய்- கல்வளைப் பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறும்.

04 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 05 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். உற்சவ நாட்களில் தினமும் மாலை 5 மணிக்கு 'விநாயக புராணம்' என்னும் பொருளில் ஆறு. திருமுருகன் தொடர்ந்து சொற்பொழிவாற்றுவார். (செ-104)

## பாடசாலையில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

குட்டியப்புலம் அ.த.க. பாடசாலையில் இரவு வேளையில் ஓடுபிரித்து அதிபர் அலுவலகத்திற்குள் இறங்கிய திருடர்கள் காகிதாதிகள் கடிகாரம் மற்றும் பெறுமதி வாய்ந்த பொருட்களைத்திருடிச் சென்றுள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற இச்சம்பவம் குறித்து அச்சுவேலி பொலிஸார்விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (க)

## பேராசிரியருக்கு பாராட்டு

[யாழ்ப்பாணம்]

யாழ். பல்கலைக்கழக நுண்கலைடபீடத் தலைவரும் கல்வியற்றுறை முதுநிலை விரிவுரையாளருமான கலாநிதி சபா ஜெயராசா அண்மையில் பேராசிரியராக நியமனம் பெற்றமை குறித்து பலர் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (க)

# கலைப் பணிக்காகத் தன்னை அர்ப்பணித்த நடிப்பிசைக் கலைஞன் தைரியநாதன்

ஈழத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் குறிப்பிடத்தக்க சிறந்த இசை நாடகக் கலைஞனான கலைவேந்தன் ம. தைரியநாதனுக்கு சுன்னாகம் வாழ் மக்கள் இன்று சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலய மைதானத்தில் நடைபெறவுள்ள நாடக விழாவில் பட்டம் வழங்கி கௌரவிக்கவுள்ளனர்.

அண்மைக் காலத்தில் பிரபல்யமாக பேசப்படும் ஈழத்து இசை நாடகக் கலைஞர்களுள் கலைவேந்தன் ம. தைரியநாதன் உன்னத இடத்தில் உள்ளார் இவரது கலைவாழ்வும் பணியும் மேலும் ஆராயப்பட வேண்டியுள்ளது. யாழ்ப்பாணத்தின் வடபகுதியான சுன்னாகத்தில் 1949 ஆனி 5ம் திகதி மரியான் வைத்தியானம் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். ஆரம்பக் கல்வியை சுன்னாகம் றோ. க. த. க. பாடசாலையிலும் உயர் கல்வியை ஸ்கந்தவரோதயக் கல்லூரியிலும்பெற்றுக் கொண்டார். 1961ல் தனது 12வது வயதில் நடிப்புத்துறையில் கால் பதித்த இவர் தனது குரல் வளத்தாலும், நடிப்புத்துறையாலும் இசை நாடக வடிவத்தினை தனக்கு வாலாயமாக்கிக் கொண்டார். சிறுவயதில் சுன்னாகத்தில் எம். கோபாலரத்தினத்திடம் கர்நாடக சங்கீதத்தை கற்றிருந்தார். இசை நாடகத்தில் தனது வருகைக்கு இவரே வழிகாட்டியென நினைவுபடுத்திக் கூறுகின்றார்.

### பெண் பாத்திரமேற்றவர்

சுன்னாகம இளந்தென்றல் மன்றத்தின் பிரதான பாடகராகவும், நடிகராகவும் அடையாளங் காணப்பட்ட இவரை 1963ம் ஆண்டு வண பிதா மரியசேவியர் (சவரிமுத்து) அடிகள் தனது கலைப்பணியின் ஒரு சீடராக இவரைத் தேர்ந்தெடுத்தார். அதே வருடம் மரியசேவியர் அடிகளின் நெறிப்படுத்தலில் இருந்த ஆதாம்-ஏவாள் நாடகத்தில் ஏவாள் பெண் பாத்திரமேற்று நடித்து மிகுந்த வரவேற்பைப்பெற்றார். பின்னர் 1969ல்நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வசந்தகான சபாவினர் இவரை தெரிவு செய்து சங்கரதாஸ் சுவாமிகளின் நவரச நாடகங்களை மேடையேற்றினர். இவர் பெரும்பாலும் நடிகமணி வி. வி. வைரமுத்துவுடன் இணைந்து பெண் பாத்திரங்களையே ஏற்று நடித்தார். தொடர்ந்து நடிகமணியின் மறைவு வரை அவருடன் கூட இருந்து நாடகங்களை நடித்திருக்கின்றார்.

**மரியநேசன் சுன்னாகம்**

### துணைவியின் ஒத்துழைப்பு

1960 களில் சுன்னாகம், மல்லாகம், உரும்பிராய் பங்கு நடிகர்களையும், கலைஞர்களையும் ஒன்று சேர்த்து அருட்திரு மரியசேவியர் அடிகள் திருமறைக்கலாமன்றம் எனும் கலை நிறுவனத்தை தொடக்கி வைத்தார். ஆரம்ப கால அவர்களது பாஸ் நாடகங்களில் நடித்த தைரியநாதன் பின்னர் அம்மன்றத்தின்முழு நேரக்கலைப் பணியாளனாக தன்னை மாற்றிக்கொண்டார். இன்று தன்னையும் தன்குடும்ப அங்கத்தினரையும் அக்கலைப் பணிக்காக ஒப்படைத்துள்ளார்: 1975ம்ஆண்டு மானிப்பாய் நவாலியை பிறப்பிடமாகக்கொண்ட தங்கேஸ்வரியை தனது துணைவியராக தேர்ந்தெடுத்தார் இவரது கலை வாழ்விற்கு இவரது துணைவியாரின் ஒத்துழைப்பு மிகமுக்கியமாகஇருக்கிறது எனக்கூறுகிறார். மிக உச்சமான குரல் வளத்தால் அனேகமான ரசிகர்களின் மனதில் இடம்பிடித்துள்ளார். தனக்குப் பின்இசை நாடகத்தை கொண்டுசெல்வதற்கென பலசீடர்களை உருவாக்கியுள்ளார்; தற்போது யாழ்ப்பாணத்தில் வசித்து வரும் இவர் தனது குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களையும் தனது துறையில் வளர்த்து வந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது ஐந்து பிள்ளைகளின் (4ஆண் 1பெண்) தந்தையான இவர் பிள்ளைகளின்கலைவளர்ச்சியுடன்கல்வி வளர்ச்சியிலும் அக்கறைகாட்டியுள்ளார்,

### திருமறைக் கலா மன்றம்

இவரும் இவரது குடும்பத்தினரும் கடந்த தசாப்தகாலங்களில் திருமறைக்கலாமன்றத்தின் முக்கிய கலைஞர்களாகத் திகழ்வது இவர்களும், திருமறைக்கலாமன்றமும் பெருமையடையக்கூடிய விடயமாகும். 1997ம்,1998ம் ஆண்டுஐரோப்பிய நாடுகளிலுள்ள பிரான்ஸ், ஜேர்மனி, இங்கிலாந்து, சுவிஸ்லாந்து, நெதர்லாந்து போன்ற இடங்களில் வடலிக்கூத்தர், கலைம்பாலம் போன்ற திருமறைக்கலாமன்றத்தின் வெளிநாட்டு கலைப் பயணங்களில் பங்கு கொண்டுள்ளார். மேலும் ஈழத்தின் பல பாகங்களிலும் நடைபெற்ற நாடகங்களில் பங்கு கொண்டுள்ளார்.

மேலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன நாடக ஒலிபரப்பிலும் இலங்கை ரூபவாகினியிலும் பங்கு கொண்டுள்ளார். மிகச்சிறந்த கலை ஆளுமையும், இறுக்கமாகப் பற்றும் கொண்ட கலைவேந்தன். பாடசாலை மட்டங்களிலும், கிராம அமைப்புகளிலும் சென்று நாடகங்களை பழக்கி வருகின்றார். இவர் ஒரு சிறந்த ஒப்பனைக்கலைஞன், நெறியாளன்: மேலும் இசை நாடகம் தொடர்பான கலந்துரையாடல்களில் உரை நிகழ்த்தல், வகுப்புக்களை நடத்தல் போன்றவற்றினூடாகவும் இசை நாடக உயிரப்புமைக்கு உயிரூட்டி வருகின்றார்.

### பட்டங்கள்

இவருக்கு 1970ம் ஆண்டு நெல்லண்டைப் பத்திரகாளி அம்மன் கோவில் சபையினர் ''நடிப்பிசைச் செல்வன்'' என்ற பட்டத்தை ஆசிரியர் அண்ணாச்சாமி ஊடாக வழங்கிக் கௌரவித்தனர்; 1991ல் திருமறைக் கலா மன்றத்தினால் ''கலை வேந்தன்'' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார் மேலும் பல மேடைகளில் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அண்மையில் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தால் 90களில் வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னணி கலைஞர்களுள் இவருக்கும் பொன்னாடை போர்த்தி, கிரீடம் சூட்டி கௌரவித்தமை குறிப்பிடத் தக்கது; இத்தகைய பெரும் கலைஞனின் கலைப் பணியும் இவரது வாழ்வும் சிறக்க வேண்டும். இத்தகைய கலைஞன் பற்றிய ஆய்வுகள் மேலும் செய்யப்பட வேண்டும்;

**இவர் வி. வி. வைரமுத்துவுடன் இணைந்து நடித்த நாடகங்களும் பாத்திரங்களும்**

| | |
|---|---|
| அரிச்சந்திரா | — சந்திரமதி |
| பூதத்தம்பி | — அழகவல்லி |
| நல்லதங்காள் | — அலங்காரி |
| ஞானசௌந்தரி | — லேனாள் |
| நந்தனார் | — பெரிய கிழவர் |
| பவளக்கொடி | — பவளக்கொடி |
| சத்தியவான் சாவித்திரி | — சாவித்திரி |
| சாரங்கதாரா | — சித்திராங்கி |
| அல்லி அருச்சுனா | — அல்லி |
| கோவலன் கண்ணகி | — கண்ணகி |
| சிறீ வள்ளி | — வள்ளி |

# சுட்டுக் கொல்லப்பட்ட எனது தம்பிக்கு அரசியல் தொடர்பு எதுவும் இல்லை

## மரணமானவரின் சகோதரி சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

சுட்டுக் கொல்லப்பட்ட எனது தம்பிக்கு அரசியல் தொடர்புகளோ அல்லது எதிரிகளோ நான் அறிந்த வரையில் இல்லை.

மேற்கண்டவாறு கடந்த புதன்கிழமை சுட்டுக்கொலை செய்யப்பட்ட யாழ்ப்பாணம் கொட்டடியைச்சேர்ந்த இரத்தினம் கணேசலிங்கத்தின் (வயது 42) சகோதரி சுந்தரலிங்கம் பரமேஸ்வரி யாழ். நீதிமன்றபதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் தெரிவித்தார்;

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்;

சம்பவதினம் ஒருவர் வந்து யா ஆஸ்பத்திரிவீதியில் உனது கணவன் இறந்து கிடப்பதாக எனது மைத்துனியிடம் கூறியதை யடுத்து நானும் எனது மைத்துனியும் அயலவரின் துணையுடன் சம்பவம்நடந்த இடத்திற்கு இலாம்பு கொண்டு சென்ற வேளை அவ்விடத்தில் உடனடியாக இராணுவத்தினர் விரைந்து வந்து சடலத்திற்குஅருகில்எங்களைச் செல்ல வேண்டாம் என்றும், எங்களை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறைப்பாடு கொடுக்கும் படி கூறினார்.

அவ்வாறுநாம் பொலிஸ் நிலையத்திற்குசென்றவேளை யாழ். பொலிஸார் எங்களிடம் வாக்கு மூலம் பெற்று குறித்த திகதியில் யாழ். நீதிமன்றத்திற்கு வருமாறு கட்டளை யிட்டனர் என்றார். (க-6)

# மகாத்மா காந்தியின் பிறந்த நாளை சர்வதேச ஆன்மீக தினமாக பிரகடனப் படுத்த வேண்டும்

## ஐ.நா.சபையிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

மகாத்மா காந்தியின்பிறந்த தினத்தை சர்வதேச ஆன் மீக தினமாக பிரகடனப்படுத்துமாறுஐக்கியநாடுகள்சபையிடம்ஆன்மீகஎழுச்சிப் பேரணி அமைப்பு கேட்டுள்ளது.

பல்வேறுஆன்மீகஅமைப்புக்களை ஒன்றிணைத்து, பல்வேறு பணிகளை நடத்தவுள்ள இந்த அமைப்பு முதல் கட்டமாக காந்தி பிறந்ததினமாகிய ஒக்டோபர் 2ஆம் திகதி ஆன்மீகஎழுச்சிப் பேரணி ஒன்றை கொழும்பு முகத்துவாரத்தில் நடத்தவிருக்கிறது:

அன்றையதினம்பகல் 12.00 மணிக்கு ஆலயங்களில் மணிகள் ஒலிக்கப்பட்டு இன, மத வேறுபாடின்றி உலக சமாதானத்திற்கான ஆன்மீக வழிபாடுகளை நடத்துமாறும் ஆன்மீக அமைப்பினர் மக்களைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (செ-7)

## சோதிட பலன்

[7-ம் பக்கத் தொடர்ச்சி)

**மாணவர்களுக்கு:**
2001 ஜுன் வரை கல்வி லாபம் குறையும், ஜுன்13இல் இருந்து கல்வி, தேர்வு, வெற்றி, சிறப்பு அமையும்;

**இளைஞர் யுவதிகளுக்கு:**
பணவிருத்தி, பலவிதப் பொருள் லாபம், வெளிநாட்டுப் பயண நன்மை(சிலருக்கு) தோன்றும், விவாகத் தடங்கல் இருக்கும்;

**தொழிலாளர்களுக்கு:**
2001 ஜுன், 13வரை அதிக பிரயாசம், அலைச்சல், ஜுன் 13இன் பின்னர் வருமானம் திருப்தியாக இருக்கும்;

**முதியோருக்கு:**
2001 ஜுன் வரை ஆறுதல் குறைவு, ரோகப் பிரச்சினை தோன்றும்; ஜுன், 13இல் இருந்து நோய் நீங்கி தேக சுகம், லாபம் இருக்கும்,

(தொடரும்).

# வடமராட்சிப் பகுதியில் இயந்திரப் படகில் மீன்பிடிக்க அனுமதி

## எனினும் இறுக்கமான நிபந்தனைகள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிப் பகுதி கடற்றொழிலாளர்களை அண்மையில் 524 ஆவது படைத் தளத்திற்கு அழைத்த படை அதிகாரி இயந்திரப் படகில் மீன்பிடிப்பதற்கு நிபந்தனையுடன் அனுமதி வழங்கியுள்ளார்.

இதன் பிரகாரம் வடமராட்சி வல்வெட்டித் துறைக்கும் சற்கோவளத்திற்கும் இடைப்பட்ட கடற்பரப்பில் தினமும் 8 குதிரை வலு கொண்ட இருபது இயந்திரப் படகுகளில் மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தினமும் மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணிவரை குறித்த 20 படகுகளில் மீன்பிடிக்கலாம் எனவும், அப் படகுகளில் வெளிச்சம் தாங்கிகள் ஏற்றப்பட வேண்டும் எனவும் கடற்பரப்பில் ஏழு மைல் தூரம் சென்று கடற்படையினரின் பாதுகாப்புடன் மீன் பிடிக்கலாம் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் இவ்வாறு பிடிக்கும் மீன்களை தாங்களே கொள்வனவு செய்ய உள்ளதாகவும், எஞ்சியவற்றை பொது மக்களுக்கு விற்கலாம் எனவும் 524 ஆவது கட்டளை அதிகாரி மீனவர் சங்கப் பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார். (உ-23)

# திருடன் தப்பியோட அ.அட்டைகள் அகப்பட்டன

(சுழிபுரம்)

ப.நோ கூ. சங்கத்தில் திருடியவர்களை மடக்கிப் பிடிக்க முனைந்த போது அவர்களில் ஒருவர் தனது அடையாள அட்டையை மட்டுமன்றி மனைவியினது அடையாள அட்டையையும் பறிகொடுத்துவிட்டு ஓட்டம் பிடித்த சம்பவம் அண்மையில் சித்தன்கேணிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

சித்தன்கேணி சிவன் கோவிலுக்கு அருகாமையில் இயங்கி வரும் பச்சிலைப்பள்ளி ப.நோ.கூ.சங்கக் கிளையில் பொருட்களைத் திருடிக் கொண்டு ஆலயப் பக்கமாகத் திருடர்கள் சென்றவேளை.

அங்கு திருவிழாவில் கூடி நின்ற இளைஞர் குழாம் அவர்களைப் பிடிக்க முனைந்த போது திருடர்கள் அகப்படாது ஓடிவிட்டார்கள். மேற்படி அடையாள அட்டைகள் மாத்திரமே அகப்பட்டதாகக் கூறப்படுகிறது.

குறித்த இரு அடையாள அட்டைகளும் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன்,

உரியவரைத் தேடிக் கண்டு பிடிக்கும் பணி முனைப்புப் பெற்றுள்ளது:

உ-ப-10,123)

# தனிச் சிங்களத்தில் கடிதம் சாவகச்சேரி நகர சபைத் தலைவர் குழப்பம்

[சாவகச்சேரி]

சாவகச்சேரி நகரசபைத் தலைவர் பெ. தனபாலசிங்கத்திற்கு உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி ஆணையாளரினால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் தனிச் சிங்களத்தில் அமைந்துள்ளதாக அவர் கவலை வெளியிட்டுள்ளார்.

இதனால் அக் கடிதத்தை தம்மால் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதனை அடுத்து அக் கடிதத்தை திருப்பி அனுப்பி வைத்துள்ள தலைவர் அதன் தமிழ்மொழிபெயர்ப்பை அனுப்பி வைக்குமாறு உதவி ஆணையாளரை கடிதம் மூலம் கேட்டுள்ளார்.

இக் கடிதப் பிரதியை வடக்கு-கிழக்கு தமிழ் விவகார அமைச்சுக்கும் அனுப்பி வைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். (க)

# இலங்கைக் கரையோரத்தில் தகவல்களைப் பெற அமைச்சர்குழு நியமனம்

(கொழும்பு)

இலங்கைக்குச் சொந்தமான கரையோரப் பிரதேசங்கள் தொடர்பாக ஆராய்ந்து தகவல்களைப் பெறும் பொருட்டு அமைச்சர் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக வெளியுறவுத்துறைப் பிரதி அமைச்சர் ஹறேந்திர கொறியா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற ஒத்தி வைப்பு வேளையில் கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கும் போதே பிரதி அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில; வெளியுறவுத்துறை அமைச்சும், மீன்பிடித்துறை அமைச்சும் இணைந்து இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின் எல்லைகள் தொடர்பானதிட்டம் குறித்து ஆராயவும் இத்திட்டம் பற்றி இந்திய அரசுடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (க)

# புலிகள் தாக்குதலில் படையினர் மூவர் காயமடைந்தனர்

(கொழும்பு)

மண்கிண்டிமலைப் பகுதியில் விடுதலைப் புலிகள் மேற்கொண்டதாக்குதல் ஒன்றில் படைத்தரப்பில் மூவர் காயமடைந்ததாக பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் அண்மையில் தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் கிளைமோர்த் தாக்குதலிலேயே இவ்வாறு படையினர் காயமடைந்ததாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது:

இதேவேளையில தக்கியல்ல பகுதியில் நடைபெற்ற மற்றொரு தாக்குதலில் படையினர் தரப்பில் இருவர் பலியானதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மத்தி நாவலடி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

மாலை 5மணிக்கு விசேட வசந்த மண்டபப்பூஜையைத் தொடர்ந்து அம்பாள வீதியுலா இடம்பெறும். (உ)

## பட்டம் வழங்கிக் கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் அந்தோனியார் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள நாடக விழாவில் பிரபல நாடக நடிகர் கலைவேந்தன் ம. தைரியநாதனுக்கு 'நவரசவள்ளல்' என்னும் பட்டத்தினை வழங்கஇருக்கிறார்கள்.

வலம்புரி உதவிஆசிரியர் கவிஞர் துரையர் இப்பட்டத்தினை புனித சூசையப்பர் தந்தையர் மன்றத்தின் சார்பில் வழங்கிக் கௌரவிக்கவுள்ளார். (செ)

## வீதி புனரமைப்பு

(புலோலி)

வடமராட்சி கிழக்கில் சுமார் 20 வருடங்களாக கவனிப்பாரற்றுக்கிடந்த வல்லிபுரம்அம்பன்வீதிஒருகோடியே 60 இலட்சம் ரூபா செலவில் திருத்திப் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான துரித நடவடிக்கைகளை வீதிகள் அபிவிருத்தி அதிகார சபை மேற்கொண்டுள்ளது. (க-5)

## இடம் மாற்றம்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை டாக்டர்விடுதியில் தற்போது அமைந்துள்ள தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையம்கரவெட்டியில்உள்ள கட்டடத்திற்கு மாற்றப்படவுள்ளது.

மாலுசந்திக்கு அண்மையில் நெல்லியடி வீதியில் இக்கட்டடம் அமைந்துள்ளது. இத்தொலைத்தொடர்பு பரிவர்த்தனை நிலையத்தை மாற்றுவதற்கான நடவடிக்கைகளை ரெலிகொம் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. (க-52)

## இளஞ்செழியன் அமெரிக்கா விஜயம்

(வவுனியா)

வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் மூன்று வார கால விஜயம் ஒன்றை மேற்கொண்டு இம் மாதம் 29ஆம் திகதி அமெரிக்காவிற்குப் பயணமாகவுள்ளார். (வ)

## மணிபல்லவத்தில் மஹோற்சவம் 4 ஆம் நாள்

## 'நயினை நாகபூஷணி அம்மன் பாமாலை'

### பிள்ளைவரம் அருள்வாள்

பெயர்சொல்லப் பிள்ளையொன்று இல்லையென்று
பிள்ளையுடன் தொட்டிலுமாய் (ப்) பொன்னிற் செய்து
துயர்போக்க உன்பதமே சரணமாகி (த்)
துதிப்போர்க்கு மழலைகளை நல்கும் தாயே!
அயர்வுற்று ஏதிலிகள் ஆகிமக்கள்
அன்னையுனை அடைந்தார்கள் அவர்கள்இல்லம்
உயர்வுற்றுப் பிள்ளைக்கனி அமுதச் செல்வம்
உவப்போடு நிரம்பிடநீ அருள்வாய் தாயே!

நயினைச் சோதி

### புகழ்பூத்த நயினாதீவு

அருங்கலைகள் காப்பியங்கள் போற்றுகின்ற
ஆதியிலே புகழ்பூத்த நயினாதீவில்
விரும்புகின்ற பதவிபுகழ் வந்து கூடி
விக்கினங்கள் பிரச்சினைகள் தீர வென்றே
அரும்புகின்ற நினைவெல்லாம் நாகம் மாளின்
அருளாலே நிறைவேற நேர்த்தி செய்யப்
பெருங்கடலின் அலைகளையூடறுத்து மக்கள்
பேரலையாய்த் தரிசிக்கச் செல்கின்றாரே.

இறைமணி
வேலணை.

### பாடுகளை நீ கேட்பாய்!

வல்வினைகள் போக்கிடுவாய் நாகதாயே
வீரமுடன் எமைக் காத்தருள்வாய் நாகதாயே
நோய் பிணிகள் நீக்கிடுவாய் நாகதாயே
நேசமுடன் அரவணப்பாய் நாகதாயே
நேர்த்திக் கடன் வைப்போமே நாகதாயே
நேர்ந்த துயர் கேட்டிடுவாய் நாகதாயே
நாட்டு நலம் பெருக்கிடுவாய் நாகதாயே
நம் தமிழர் பாடுகளை நாகதாயே
நாம் உரைத்தோ நீ கேட்க வேண்டும்தாயேதாயே!

எம். எஸ். எஸ். கீர்த்தி

### அகிலமெல்லாம்உன் ஆட்சி

தேனும்நீ, தென்றலும் நீ, தீந்தமிழும் சக்தியும் நீ
வாள இடியும் வரை எட்டுத் திசையோடும் எரிமலை நீ
வைதவர்க்கு வாள் முனைநீ, வரமருளும் அருள் மழை நீ!
யாவும் நீ சர்வசங்கார சக்தியுமை வேல் விழியே
சீறுங்கடலொலியே ஸ்ரீ நயினை நாகபூசணியே
மோனத் தவத்தோரின் முழுமதியே அகத் தொளிரும்
கால நதியே உன் கருநாக முகிற்குடைக்கீழ்
ஆடி நடக்குதே அகிலமெல்லாம் உன் ஆட்சி.

கு. துரைராசா
உருப்பிராய்.

### சமாதானம் வேண்டும்!

மல்லிகையின் சிரிப்பே! மாணிக்க நந்தவனமே!
முல்லையின் சிவப்பே! முறுவலின் சங்கீதமே!
சமுத்திரம் தாலாட்டும்! அமிழ்த மாளிகையே!
முளைத்திடும் சமாதானம் நிலைத்திட அருள்வாயே!

புலேந்தி – தீலீப்காந்த்
க. கு. அ. இ. 18

# சண்டிலிப்பாய் பிர.செ.பிரிவில் தலைமைத்துவப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்க, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சி நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

30பிரதி நிதிகள் கலந்து கொள்ளும் இத் தலைமைத்துவப் பயிற்சி 5 தினங்கள் இடம் பெறவுள்ளன.

வடக்கு-கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடனேயே இத் தலைமைத்துவப் பயிற்சி இடம் பெறவுள்ளது.

மேற்படி பயிற்சி சண்டிலிப்பாய்ப்பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தலைமையில் நடை பெறவுள்ளது. (செ-75)

## இன்று சதுர்த்தி உற்சவம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தில் சதுர்த்தி தினமாகிய இன்று பிற்பகல் 4.00 மணியளவில விசேட பூசை வழிபாடுகள் நடை பெறும். [க]

## செய்தித் துளிகள்

### மணிவாசகர் குருபூசை

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமறை மன்றத்தினரால் நாளை திங்கட்கிழமை காலை நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு பூஜை வழிபாடு நடைபெற்று மன்றச் செயலகத்தின் ஸ்ரீ காமாட்சி மடாலயத்தில மணிவாசக சுவாமிகளுக்கு பூஜையும், திருவாசகப் பாராயணமும் நடைபெறவுள்ளது. (செ)

### நாடக விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று மாலை 6.30 மணிக்கு "அரிச்சந்திர மயான காண்டம்", பூதத்தம்பி, "ஒளி" என்னும் நாடகங்களும், 'ஆவந்தி' இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியும் நடைபெறவுள்ளன. (செ)

### படையினர் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் படையினர் தேடுதல் நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டுள்ளனர்.

கறுக்காய் முனை, விநாயகபுரம், சிலம் பற்று போன்ற பிரதேசங்களில் இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இந் நடவடிக்கையின் போது பலர் இராணுவ முகாமிற்கு அழைத்துச் செலவப் பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப் பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

### வருடாந்த மஹோற்சவம்

(இணுவில்)

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஒன்பது தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 4ஆம் திகதி புதன் கிழமை தேர்த் திருவிழாவும் 5ஆம் திகதி வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன. (செ-49)

### இல்ல விளையாட்டு போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை பாலர் வகுப்பு மாணவர்களுக்கான வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று காலை 8.45 மணிக்கு பாடசாலை மைதானத்தில நடைபெறவுள்ளது.

அதிபர் வே. ஞானகாந்தன் தலைமையில நடைபெறவுள்ள இந்நிகழ்வில வைத்திய கலாநிதி வை. யோகேஸ்வரன் பிரதமவிருந்தினராக கலந்து கொள்வார். (செ)

### அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கனகபுரம், கிளிநொச்சி என்னும் முகவரியை உடையசெல்லையா கோனேஸ்வரன் என்பவருடையதேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளவும். (செ)

### இறுதிப் போட்டி

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் மத்திய சன சமூக நிலைய விளையாட்டுக் கழகம் நடத்தும் ஆறுமுகம் கமலநாதன் ஞாபகார்த்த துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி இன்று மதியம 12 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் கே. சிவாஜியும், சிறப்பு விருந்தினராக கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் பொ. கமலநாதனும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ)

### இன்று விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம ஐயனார் சன சமூக நிலைய, ஐயனார் முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று பி. ப. 1.00 மணிக்கு ஐயனார் கோவிலடியில் நடைபெறவுள்ளது.

சனசமூக நிலையத் தலைவர் த. வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு யாழ் மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (செ)

### பாடசாலைக்கு அன்பளிப்பு

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு இளைப்பாறிய ஆசிரியை செல்வி தில்லைநாயகி வேலுப்பிள்ளை (பருத்தித்துறை) சுமார் 10,000 ரூபா பெறுமதியான பாண்ட் வாத்தியக் கருவிகளை அன்பளிப்பாகக் வழங்கியுள்ளார். இப் பாடசாலையின் கொழும்பு பழைய மாணவிகள் சங்கம 4,500 ரூபாபெறுமதியான பாண்டவாத்தியக கருவிகளையும் அன்பளிப்பாக வழங்கியுள்ளது. (க-52)

### நூல்கள் அன்பளிப்பு

(புலோலி)

கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி மாணவர்களின் நன்மைகருதி கல்லூரியின் பழைய மாணவரான கனடாவில் வசிக்கும் கந்தையா பாலசுப்பிரமணியம் 25,000 ரூபா பெறுமதியான நூல்களை அன்பளிபபாக அனுப்பி வைத்துள்ளார். இந்நூலகள அதிபர் வி. சிவசிதம்பரத்தினால் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. (க-52)

### இளைஞனை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கடந்த 18 ஆம் திகதியன்று வீட்டிலிருந்து சுன்னாகம் செல்வதாகக் கூறி விட்டுச் சென்ற அச்செழு கொலனிப் பகுதியைச் சேர்ந்த இலட்சுமணன் கமல் (வயது20) என்ற இளைஞனைக் காணவில்லை என அவரின் தந்தை கடந்த வியாழக்கிழமை யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

மேற்படி இளைஞன் பாண் விநியோகம் செய்து வருபவர் என்று தெரிவிக்கபபடுகிறது. (செ)

# மக்கள் என்னை நீக்கும்வரை நானே நாட்டின் ஜனாதிபதி

## நித்தம்புவவில் சந்திரிகா

(கொழும்பு)

மக்கள் தன்னைப் பதவியில் இருந்து நீக்கும் வரை தானே ஜனாதிபதியாக இருக்கப் போவதாக, ஜனாதிபதி சந்திரிக்காபண்டாரநாயக்கா குமாரணதுங்க கூறியுள்ளார்.

நித்தம்புவ அத்தனகல கூட்டுறவுச் சங்க அபிவிருத்தித் திட்டத்தை திறந்துவைத்துப் பேசும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்; மக்கள் தனக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளதாகவும், அதனைத் தான் துஷ்ப்பிரயோகம் செய்யப் போவதில்லை என்றும் குறிப்பிட்ட ஜனாதிபதி, மக்களின் ஆதரவு தனக்கு இப்போதும் இருப்பதாகத் தெரிவித்தார்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்க்கட்சியுடன் சேர்ந்து கொண்டாலும் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பலம் குறைந்து விடப் போவதில்லை என்றும் தனது கட்சி பலம் வாய்ந்த ஆளும் கூட்டணியாக விளங்குவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (க)

## இராசி பலன்

24 6 2001
(ஆனி 10, ஞாயிறு)
திருதியை ந. ப 11 55 வரை
பூசம் பி ப 3 02 வரை
ராகுகாலம் 4.25-5 55
நல்லநேரம் 8 55-10 25
சித்தம், சதுர்த்தி விரதம்

**மேடம்**
அரசநன்மை, தன்னம்பிக்கைக் குறைவு, பதட்டமடைதல், முயற்சி தாமதம்.

**இடபம்**
காரிய நன்மை, வாக்கு மேன்மை, தனவரவு, இனிய சம்பவம்.

**மிதுனம்**
வீண்செலவு, வாக்குக்கலகம், மதிப்புக்குறைவு, காரியதாமதம்.

**கடகம்**
ஜனவசியம், பெரியோர் மதிப்பு, புதிய பொருள் சேர்க்கை, காரியம் கைகூடும்.

**சிங்கம்**
உணர்ச்சிவசப்படல், பிரயாண அலைச்சல், சுபசெலவு, எதிர்பாராத நன்மை.

**கன்னி**
கீர்த்தி, காரியம் கைகூடும், தெய்வதரிசனம், தனலாபம்.

**துலாம்**
அதிகாரம், தொழில்சிறப்பு முயற்சிகைகூடும், பிறர்உதவி.

**விருச்சிகம்**
வயிற்றுக்கோளாறு, கட்டுப்படுதல், முயற்சி தாமதம், மனச்சஞ்சலம்.

**தனுசு**
குடும்பப்பிரச்சினை, வியாதி, காரிய தடங்கல், நல்ல உணவு கிடைத்தல்.

**மகரம்**
வாகனவசதி சுவாரஸ்யம், அபூர்வ சந்திப்பு, காரிய நன்மை.

**கும்பம்**
பகைவர் விலகுவர், வியாதி குணமடைதல், சந்தோசமான நிலை, காரியம் கைகூடும்.

**மீனம்**
குடும்பக்கவலை, முயற்சி தாமதம், வியாதி, வியாபார நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## முன்பள்ளிச் சிறுமியின் நகைகளைப் பறித்த பலே ஆசாமி

### இராசாவின் தோட்டத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாதஒருவர்முன்பள்ளி மாணவி ஒருவரை ஏமாற்றி அவர் அணிந்திருந்த தங்க நகைகளை அபகரித்துச் சென்ற சம்பவம் இராசாவின் தோட்டம் அருள் மாதா கோவிலடியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது; அப்பகுதிக்கு அண்மையிலுள்ள முன்பள்ளிஒன்றில்கற்கும்இம்மாணவியின்பிறந்த நாளன்றுபள்ளி செல்லும் போது பெற்றோர் தங்க நகைகளை அணிவித்து அனுப்பினார்கள்.

விடயம் அறிந்த திருடன் அப்பிள்ளையின் மாமா எனக் கூறி பிள்ளையைத் தன்னுடன் கூட்டிச்சென்று நகைகளை அபகரித்துச் சென்றுள்ளான்.

யாழ் நகரப் பகுதிகளில் திருட்டுக்கள் வெவ்வேறு வடிவங்களில் இவ்வாறு இடம் பெற்றுவருவது பற்றிஅப்பகுதி மக்கள் பலத்தஅதிருப்திவெளியிட்டுள்ளனர்.

சிறுபிள்ளைகளுக்குநகைகள் அணியும் விடயத்தில் பெற்றோர் மிகவும் எச்சரிக்கையுடன் செயற்படவேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (க-செ)

## யாழ்ப்பாணத்தில் விரைவில் மண் ஆராய்ச்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

விவசாயச் செய்கையில் ஏற்படும் புதியவகை நோய்த் தாக்கங்களைஇனங்காணவும் அவற்றை எதிர் கொள்ளவும் யாழ்ப்பாணத்தில் மண் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படவுள்ளது.

மேற்படி மண் ஆராய்ச்சி நிலையம்அமைப்பது தொடர்பாக யாழ்.மாவட்ட அரச அதிபர் து: வைத்திலிங்கம் தலைமையில்யாழ்.செயலகத்தில் நடைபெற்றகூட்டத்தில் இது தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையத்திற்கு தேவையான உபகரணங்களைப் பெறுவதற்கு வடக்குப் புனர்வாழ்வு-புனரமைப்பு அமைச்சு 3 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இந்த உபகரணங்களை கொள்வனவு செய்யும் பணியில் வவுனியாவில் இயங்கும் விவசாய ஆராய்ச்சி நிலையப் பிரதிப்பணிப்பாளர் ஈடுபட்டு வருவதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

## வவுனியா, கொழும்பு ரயில் பெட்டிகளின் எண்ணிக்கையை கூட்டுமாறு மாவை. எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

வவுனியாவில் இருந்து கொழும்பு செல்லும் ரயில் வண்டியின் பெட்டிகளுடன் மேலும் 3 பெட்டிகளை கூடுதலாக இணைக்குமாறு மாவைசேனாதிராஜா போக்குவரத்து அமைச்சர் தினேஷ் குணவர்த்தனாவிடம் கேட்டுள்ளார்.

வவுனியாவிலிருந்து கொழும்பு செல்லும் பயணிகள் ஆசனம் இன்மையால் நின்றவாறே பயணம் செய்கின்றனர்.

நிற்க இயலாதவர் பயணம் செய்யாது திரும்பி விடுகின்றனர். இதனால் அவசரதேவையின் நிமித்தம் கொழும்பு செல்வோர் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர் என்று அவர் அமைச்சருக்கு மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக ரெயில்வே அதிகாரி தெரிவிக்கையில் கடுகதி ரயில் வண்டிக்கு இன்னும் 2 அல்லது 3 பெட்டிகளை இணைக்குமாறு ரயில்வே திணைக்கள முகாமையாளரை தான்ஏற்கனவே கேட்டுள்ளதாகவும் இது குறித்து எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (செ-7)

## சுடுநீர் கொட்டுப்பட்டதால் பெண் குழந்தை பலி

(கொழும்பு)

சுடுநீர் கொட்டுப்பட்டதில் ஒன்றரை வயதுக் குழந்தை ஸ்தலத்திலேயே பலியாகிய சம்பவம் பதுளைப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

நேத்திராங்கனி என்ற பெண் குழந்தையே சுடுநீர் கொட்டுப்பட்டதால் உடலெங்கும் வெந்து கொப்புளங்களுக்குள்ளாகி மரணமானது.

தாயார் ஹீட்டரில் தண்ணீரைக் கொதிக்க வைத்து விட்டு வெளியே சென்ற பின்பு குழந்தை கொதிக்க சுடுநீர்ப் பாத்திரத்தை எடுக்க முயன்ற போதே இச்சம்பவம் நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-3)

## இன்று ஒரு தகவல்

# அன்பே அருமை விருந்து

சாஅதிஷிராஸ்நகரப்பெரும் புலவர். அவரை எல்லாரும் மதிப்புடனும், பெருமையுடனும் நடததினார்கள். ஒரு நகரில் பெரிய செல்வர்ஒருவர் வீட்டில் விருந்து நடந்தது. சாஅதியும் அதற்குஅழைக்கப் பட்டிருந்தார். பலவகையான உணவு வகைகள் பரிமாறப் பட்டன. விருந்து முடிந்தது. விருந்து கொடுத்தவர் எல்லோர் முன்னிலையிலும் சாஅதியைப்பார்த்து, விருந்து எப்படி? என்று கேட்டார். அதற்கு சாஅதி எங்கள் ஷிராஸ் நகர விருந்துக்கு ஈடாகுமா? என்றுபதில்சொன்னார்.

அதே நகரத்தில் இதைவிடப் பெரிய விருந்து ஒன்று நடந்தது சாஅதியும் அதில் கலந்து கொண்டார். அப்பொழுதும் அவர் 'இது எங்கள் ஷிராஸ் நகர விருந்துக்கு ஈடாகாது' என்றார். அங்கிருந்த எல்லோரும் எப்படித்தான் ஷிராஸ் நகரத்தில் விருந்து தருகின்றனர் என்பதை அறிய விரும்பிச் சாஅதியுடன் அவர் நகரத்திற்குப் புறப்பட்டுச் சென்றனர்.

நண்பர்களுடன் தம் வீட்டை அடைந்த சாஅதி தன் மனைவியைப்பார்த்து, 'விருந்துக்கு ஏற்பாடு செய்' என்றார். சிறிது நேரத்தில் விருந்தாக ரொட்டியும். நீரும் தான் இலையில் பரிமாறப்பட்டன. சாஅதியைப்பார்த்து 'இதையா சிறந்த விருந்து என்று சொன்னீர்?' என்று கேட்டார்கள் நண்பர்கள். 'ஆம். அதில் என்ன ஐயம்' என்ற சாஅதி 'எனக்குப் பிடித்த உணவை நான்உண்கிறேன் என் விருந்தினர்க்கும் அதையே கொடுத்து மகிழ்கிறேன் ஆனால் உங்கள் ஊரில் மகிழ்ச்சிக்காகவும் ஆடம்பரத்திற்காகவும் விருந்து படைக்கின்றனர். அது விருந்தே ஆகாது. நம் வீட்டில் உள்ள எளிய உணவை உள்ளன்போடு கொடுத்து விருந்தாளியை உபசரிப்பது தான் உண்மையில் உயர்ந்த விருந்தாகும் என்றார்.

பேராசிரியர் எ. சோதி

# யாழ். செயலகத்தில் பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பப் படிவங்கள்கையிருப்பில்இல்லையாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தில் பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பப் படிவங்களுக்கு கடந்த இரு மாதங்களாக பெருந்தட்டுப்பாடு நிலவுவதாக தெரிய வந்துள்ளது

இதன் காரணமாக இறப்பு சான்றிதழ் விண்ணப்பப் படிவங்களில் காணப்படும் இறப்பு என்பதை நீக்கி பிறப்பு என மாற்றிப் பதிந்து அனுப்புமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூறுவதாகவும்,

இதனால் படிவங்களை நிரப்புவதில் பொதுமக்கள் பெரும் இடைஞ்சல்களுக்கு முகம் கொடுத்துவருவதாகவும்,

இறப்பு பதிவுச் சான்றிதழில் காணப்படும் இறப்பு நிகழ்ந்ததற்கான காரணம் என்பதனை பிறப்பு நிகழ்ந்ததற்கான காரணம் என்று மாற்றும்போது அதற்கான விடையளிப்பதில் மிகவும் சங்கடமான நிலை காணப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை, யாழ் செயலகத்தில் தினமும் சராசரியாக 500 பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பப் படிவங்களுக்கும் 100 இறப்புச் சான்றிதழ் விண்ணப்பப் படிவங்களுக்கும் தேவைப்பாடு இருப்பதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க, மேற்படி படிவத்திற்கு நிலவும் தட்டுப்பாடு குறித்து கொழும்பில் சம்பந்தப்பட்ட திணைக்களத்துடன் தொடர்பு கொண்ட போதிலும் ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படவில்லை என செயலக அதிகாரிகள் தெரிவித்தனர். (உ-10)

## மீன்பிடி உபகரணம்

[யாழ்ப்பாணம்]

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தின் ஊடாக வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்கு நேற்றையதினம் ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் கடன் அடிப்படையில் வழங்கப்பட்டன. (உ-6)

# அரச ஊழியர்களுக்கு 2001 டிசம்பர் வரை சம்பள உயர்வு இல்லை

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்கு இந்தவருட இறுதிவரை சம்பள உயர்வு வழங்கப்பட மாட்டாது என துறைமுக அபிவிருத்தி அமைச்சர் றொனிடிமெல் தெரிவித்துள்ளார்.

துறைமுக ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கை தொடர்பாக துறைமுக ஊழியர் சங்கப்பிரதிநிதிகளுடனான சந்திப்பின் போதே அமைச்சர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் துறைமுக ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கையை ஏற்பதாகவும் ஆனால் இது தொடர்பாக எந்த முடிவையும் எடுக்க முடியாத நிலையில் தாம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (ந-5)

## மிருசுவில் படுகொலை விசாரிக்க பொலிஸ்குழு

(கொழும்பு)

மிருசுவில் படுகொலைச் சம்பந்தமான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ்குழுவொன்றுநேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்துள்ளது.

இந்த பொலிஸ்குழு மூன்று தினங்கள் இங்கு தங்கியிருந்து விசாரணைகளை மேற்கொள்ளும் என்றும் பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது. (வ)

# விசேட புலனாய்வுப் பிரிவு விசாரணைக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டிலிருந்து 1996, 97 ஆம் ஆண்டுப் பகுதியில் காணாமற் போனோர் தொடர்பான விசாரணையினை மேற்கொண்டுவரும் விசேட புலனாய்வுப் பிரிவினர், பின்வருவோர் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்களின் உறவினர்களை மற்றும் சாட்சிகள் முறைப்பாட்டுக்காரர்களை உடன் யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்.

★ பெனாண்டோ ஜெயகாந்தன் (பி-130)29, புங்கங்குளம் வீதி. அரியாலை

★ வல்லிபுரம் பாஸ்கரன் (பி-85) அரசடி கேணி, பளை

★ யோண் பிள்ளை-அன்ரன் அமலநாதன் (பி-21) நாவற்குழி கிழக்கு கைதடி.

(உ-10)

# உலகில் அதிகமான அகதிகள் இலங்கையரே!

## ஐ. நா. அறிக்கை தெரிவிப்பு

(கொழும்பு)

உலகிலே பெருமளவில் அகதிகள் காணப்படும் நாடாக இலங்கை மாறிவருவது அவதானிக்கப்பட்டுள்ளது.

மிகவும் சிறிய நாடான இலங்கையில் இருந்து 8 லட்சத்து 17 ஆயிரம் பேர் வெளிநாடுகளில் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதுடன்,

8 இலட்சம் பேர் உள்நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர் என்று ஐ. நா. சபையின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் தஞ்சமடைந்துள்ளவர்களில் கனடாவில் 4 லட்சம் இலங்கைத் தமிழர்களும் ஐரோப்பிய நாடுகளில் 2 லட்சம் தமிழர்களும், இந்தியா, அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்றவற்றில் முறையே 67 ஆயிரம், 40 ஆயிரம், 30 ஆயிரம் தமிழர்களும் மற்றும் வேறுநாடுகளில் 80 ஆயிரம் தமிழர்களும் அகதிகளாக தஞ்சமடைந்துள்ளதாக அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

## இராஜகோபுர கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் அருள்மிகு கந்தசுவாமி ஆலய புனராவர்த்தன சம்பு ரோகஷண குண்ட உத்தம, பசஷஆலய பஞ்சதள இராஜகோபுர மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் யூலை மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் இன்று ஆரம்பமாகிறது. 28 ஆம் திகதி வியாழக்கிழமை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறவுள்ளது. (செ)

# அஸ்கிரிய தோட்டத்தில் கசிப்பு வேட்டை

(கொழும்பு)

அஸ்கிரிய தோட்டப் பகுதியில் மாத்தளைப்பொலிஸார் மேற் கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது பாரிய அளவில் அங்கு கசிப்பு உற்பத்தி செய்யப்பட்டு வந்தமை தெரியவந்துள்ளது.

இத்தேடுதலின் போது கசிப்பு உற்பத்தி செய்தோரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஏனையோர் தப்பி ஓடிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களிடமிருந்து 75 ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்பு அடங்கிய நான்கு பரல்களையும் 100, போத்தல்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (உ-8)

# யாழ். முஸ்லிம் மக்களை மீளகுடியேற்ற நடவடிக்கை

## அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து இடப்பெயர்ந்து சென்ற முஸ்லிம் மக்கள் மீளக் குடியேறுவது தொடர்பாக வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பு வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சு நடாத்தியுள்ளது.

வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பின் தலைவர், மௌலவி பீ. ஏ. எஸ் சுபியான் உட்படயாழ். நகரில் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள முஸ்லிம் வர்த்தகர்கள் அமைச்சருடனான பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டனர்.

ஈ.பி.டி.பி யின் யாழ்மாவட்டதலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் வடக்கில் இருந்து இடம் பெயர்ந்துள்ளமுஸ்லிம் மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர தேவையான சகல நடவடிக்கைகளையும் தான் எடுக்கத் தயாராகஉள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் உறுதியளித்துள்ளார். (ம)

## தொண்டர் ஆசிரியர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர் நேர்முகப் பரீட்சையில் தோற்றி, தொண்டர் ஆசிரியர் சேவையை உறுதிப்படுத்தும் படிவத்தைப் பூர்த்தி செய்து கையளிக்காத 154 ஆசிரியர்களை உடனடியாக படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைக்குமாறு கோரியுள்ள போதிலும்,

35 ஆசிரியர் படிவத்தைப் பூர்த்தி செய்து ஒப்படைத்ததாகவும் ஏனையோர் திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு முன்னதாக அதனைச் சமர்ப்பிக்கத் தவறுமிடத்து கல்வி அமைச்சுக்குப் பெயர்கள் அனுப்புவதில் தாமதங்கள் ஏற்படும் எனவும் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-10)

# உயர்தர மாணவர்க்கு ஊக்குவிப்புத் தொகை

(யாழ்ப்பாணம்)

யுத்த சூழல் காரணமாக இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்தில் பல பாகங்களிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள உயர்தர வகுப்பு மாணவர்களின் கல்வி மேம்பாடு கருதி 500 ரூபா வழங்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை வடக்கின் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு மேற்கொண்டு வருகிறது.

தகுதியுடைய மாணவர்கள் விண்ணப்பப்படிவங்களின் 3 பிரதிகளை தத்தம் பாடசாலை அதிபரூடாக வலயக் கல்விப்பணிமனைக்குஅனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-6)

# பேரியல் இன்னமும் அமைச்சர்பதவியில்உள்ளார்

(கொழும்பு)

கிழக்கு மாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு, கிராமிய வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் திருமதி பேரியல் அஷ்ரப் இன்னமும் அமைச்சுப் பதவியில் இருக்கிறாரா என்பதுகுறித்து நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் சர்ச்சை கிளப்பப்பட்டது.

அமைச்சர் பேரியல் அஷ்ரப் இராஜினாமா செய்துள்ளார் என்ற பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு அவரது இராஜிநாமா பற்றி முடிவு எடுக்க முடியாது என்று சபாநாயகர் அனுரா பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அமைச்சர் பதவியிலிருந்துரவூப்ஹக்கீம்பதவி நீக்கப்பட்டதுபற்றி தமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக சபாநாயகர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கிய தேசிக் கட்சியின் எம்பியான ஒ. எச். எம். அஸ்வரின்கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அமைச்சர் றெஜிரணதுங்கா திருமதி பேரியல் அஷ்ரப் இன்னமும்அமைச்சர்பதவியில் இருக்கிறார் என்றும், ஆனால் அவர் இன்று சபைக்கு வரவில்லை என்றும் கூறினார். (வ)

# ஓய்வூதியம் பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 237 பேர் ஓய்வூதியம் பெற்று வருவதாக ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரதான அமைப்பாளர் றெஜி ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே மேற்கண்ட கருத்தை அவர் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இரண்டாயிரமாம் ஆண்டில் ஓய்வூதியமாக 78.6மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதாகவும் தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 9 அமைச்சர்களும், 3 பிரதி அமைச்சர்களும் ஓய்வூதியம் பெற்று வருவதாகவும் தெரிவித்துள்ளார். (க)

# வியக்க வைக்கும் விந்தை நிகழ்வுகள்

★ **தங்க முகம் வேண்டுமா?**

தங்க பஸ்பம் சாப்பிட்டால் இளமை திரும்புகிறதோ இல்லையோ ஆனால் திங்கத்தில் ஃபேஷியல் செய்தால் முகம் தங்கமாக ஜொலிக்கும் என்று நிபுணர்களின் ஆராய்ச்சி தெரிவிக்கின்றது.

இருபத்து நான்கு கரட் தங்கத்துகள் கலந்த 'கோல்ட் ஜெல்' லை முகத்தில் பூசி மென்மையாக மசாஜ் செய்தால் தங்கத்தை முகம் உறிஞ்சி பளபளப்பாகி விடுவீர்கள் என நிபுணர்கள் கூறுவது நம்பக் கூடியதாக உள்ளதா?

★ **பூச்சிகளால் படைக்கும் உணவு**

மேல் நாட்டு மனிதர்களின் நாக்கை எப்படி திருப்திப் படுத்தலாம் என்று உணவுத் தயாரிப்பாளர்கள் மண்டையைக் குடைந்து கண்டு பிடித்த நவீன உணவுகள் தான் 'எறும்பு பைட்ஸ்' எட்டுக்கால் பூச்சி, வெட்டுக்கிளி, கடடெறும்பு என்பவற்றிலிருந்து தயாரிக்கப் பட்ட விசேட உணவுகள் இவை. நெருப்பில் வாட்டி சொக்லட்டில் பிரட்டி எடுத்து விற்கப்படுகின்றதாம்.

சொக்லட் பூசப்பட்ட இந்த உணவு வகைகள் புரதச் சத்து மிக்கவை அத்துடன் கொழுப்பு அற்றவை. இவைகள் எங்கே கிடைக்கும் என்கிறீர்களா? இவை தான் இப்போது லண்டன் ரெஸ்ட்ரோரன்டுகளில் சூடு பிடித்துள்ள தின்பண்ட வகைகள் என்றால் நம்புவீர்களா?

-அவதானி-

# கேரள மாநிலத்தில் புகையிரதம் தடம் புரண்டதில் 53 பேர் பலி; 200 பேர் படுகாயம்

(புதுடில்லி)

இந்தியாவின் கேரள மாநிலத்தின் கோழிக் கோடு என்ற இடத்தில் ஏற்பட்ட ரயில் விபத்தில் இதுவரை 53 பேர் இறந்துள்ளதுடன் 200 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் 100 பேரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது

நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு சென்னையிலிருந்து புறப்பட்ட ரயில் கோழிக் கோட்டில் அமைந்துள்ள பாலம் ஒன்றில் சென்றுகொண்டிருந்த பொழுது தடம் புரண்டதனாலேயே இவ் விபத்து ஏற்பட்டுள்ளது.

இவ் விபத்தில் ரயிலின் 3 பெட்டிகள் ஆற்றுக்குள் வீழ்ந்துள்ளன. இம் 3 பெட்டிகளுக்குள்ளும் சுமார் 300 பேரளவில் பயணம் செய்துள்ளார்கள் என புகையிரத நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒரு ரயில்ப் பெட்டி பாலத்தின் ஒரு பகுதியில் தொங்கிய வண்ணம் உள்ளது. இதனை மீட்கும் பணியில் தீவிரமாக இறங்கியிருக்கும் மீட்புப் பணியாளர்கள் பெட்டியினுள் இருந்த 33 சடலங்களை இதுவரை மீட்டுள்ளனர்.

இதே வேளை ஆற்றில் வீழ்ந்த பெட்டிகளைவிட வெளியில் தூக்கி வீசப்பட்ட பெட்டிகளில், 20 பேர் பலியானதுடன் 200 பேர் படுகாயமடைந்துள்ளனர். ஆற்றில் வீழ்ந்த 300 பேரின் நிலை இதுவரை தெரியவரவில்லை.

(செ-7)

## உலக தரிசனம்

# பா. உறுப்பினருக்கு 13 மாத கால சிறை

### ஈரான் நீதித்துறையை விமர்சித்தாராம்

(தெஹ்ரான்)

ஈரான் நீதித்துறையை கடுமையாக விமர்சித்த குற்றத்திற்காக ஈரான் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு 13 மாத கால சிறைத் தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

ஹுஸைன் லுக்மானியன் என்ற எம். பிக்கே மேற்படி தண்டனை வழங்கப் பட்டுள்ளது.

அண்மையில் இவர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய போது ஈரானிய நீதித்துறையை கடுமையாக விமர்சித்திருந்தார் எனவும் அதனாலேயே மேற்படி தண்டனை வழங்கப்பட்டுள்ளது எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை மறுசீரமைப்பு வாதிகள் கைது செய்யப் படுவது, பேச்சு சுதந்திரம், மறுக்கப் படுவது. தொடர் பாக ஈரான் பாராளுமன்றத்துக்கும் நீதித்துறைக்கும் இடையில் முரண்பாடு நிலவி வருவது குறிப்பிடத் தக்கது.

(உ-9)

## செய்திப்பரல்

★ தமிழகத்தில் ''விடுதலைச்சிறுத்தை'' இயக்கத்தின் தலைவர் திருமாவளவனை கைது செய்தது குறித்து பல்வேறு இடங்களில் வன்முறைகள் வெடித்து வருகின்றன.

★ பலஸ்தீனத் தீவிரவாதிகளின் நிலைகள் மீது இனி தொடர்ந்து தாக்குதல் நடத்த உத்தரவு கிடைத்துள்ளதாக இஸ்ரேலியப் படைத்தரப்பு அறிவித்துள்ளது.

★ பாகிஸ்தானின் இராணுவத் தளபதி பர்வேஷ் முஷாரப் ஜனாதிபதி பதவியேற்றதை, அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன கண்டனம் தெரிவித்துள்ளன.

★ வட அயர்லாந்தில் கத்தோலிக்க மதத்தினருக்கும் புரட்டஸ்தாந்து மதத்தினருக்குமிடையில் வன்முறைகள் மிக மோசமாக இடம் பெற்றுள்ளன. (செ-7)

# அவுஸ். தேசிய கீதம் ரசனைக் குறைவானதாம்

(கன்பரா)

அவுஸ்திரேலிய நாட்டுத் தேசிய கீதம் ரசனை இல்லாமலும் நித்திரை ஏற்படுத்துவதாகவும் காணப்படுவதால் அதனை மாற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அவுஸ்திரேலிய செனட்டர் ஒருவர் நாடாளுமன்றத்தைக் கேட்டுள்ளார்.

சுமார் 17வருடம் பழைமை வாய்ந்த இந்த தேசிய கீதம் குழந்தைகளை நித்திரையாக்குவதற்கு பாடப்படும் தாலாட்டுப்பாட்டு மெட்டில் அமைந்துள்ளதால் அதனை மாற்றி ரசனை உள்ளதும் உணர்வூட்டக் கூடியதுமாக மாற்ற வேண்டும் என அவர் மேலும் கோரியுள்ளார்.

(உ-7)

# ஜேர்மனியில் ரயில்விபத்து 7 பேர் பலி; 18 பேர் காயம்

(பேர்லின்)

ஜேர்மனியில் இரு வெவ்வேறு ரயில் விபத்துக்களில் 7 பேர் கொல்லப்பட்டதுடன் 18 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இவ்விரு விபத்துக்களும் ரயில் பாதையின் குறுக்கே அமைந்துள்ள வாகனக்கடவையில் நிகழ்ந்துள்ளன. இதில் இராணுவ வண்டியொன்று முற்றாக சேதமடைந்துள்ளது.

இந்தக் கடவைகளில் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்குகள் முறையாக தொழிற்படவில்லை என்று கணனி மூலமான ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

விபத்து நடந்த இடத்திற்கு அருகில் 'கோர்ண்' அடிப்பது தடை செய்யப்பட்டுள்ளது என்ற வாசகம் உள்ளதால் ரயில் சாரதி அந்த இடத்தில் 'கோர்ண்' அடிக்கத் தவறியுள்ளார் எனவும், இதனாலேயே ஒரு விபத்து ஏற்பட்டதாகவும்,

அடுத்த விபத்துக்கான காரணம் அறியப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-7)

# ஊடகவியலாளர் கடத்தப்பட்ட செய்திக்கு சிரியா மறுப்பு

(பேரூட்)

பத்து வருடங்கள் சிறைத் தண்டனையை அனுபவித்து கடந்தவாரம் விடுதலையான ஊடகவியலாளர் ஒருவர் கடத்தப்பட்டார் என்ற செய்தியை சிரியா மறுத்துள்ளது.

ஊடகவியலாளர் கடத்தப் பட்டமை தொடர்பாக சர்வ தேச செய்திப்பத்திரிகைகள் மற்றும் ஊடகங்கள் வெளியிட்டுள்ள செய்தி முற்றிலும் தவறானது என்றும்,

சிரியாவுக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்கியுள்ள பிரான்ஸ் ஊடகவியலாளர்களின் திரிவுபடுத்தப்பட்ட இந்த செய்தியால் பிரான்ஸ், சிரியா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவு பாதிப்புறும் எனவும் சிரியா தெரிவித்துள்ளது. (உ-7)

# தொடர்மாடிக் கட்டடம் இடிந்து வீழ்ந்து 7 பேர் ஸ்தலத்தில் பலி

(பீக்கிங்)

சீனாவின் மத்தியமாகாண குவேனி நகரப்பகுதியில் உள்ள 17 தொடர்மாடிகளைக் கொண்ட கட்டடம இடிந்து வீழ்ந்ததில் 7 பேர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளனர் மேலும் ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த மாடிக் கட்டடத்தின் புனருத்தாரண வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில் இவ் விபத்து நிகழ்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

உயிரிழந்தவர்களில் இரண்டு பேர் மாணவர்களாவார். (உ-7)

# கேலிச் சித்திர ஓவியர் ஆபத்தான நிலையில்

(புதுடில்லி)

கேலிச் சித்திரங்கள் வரைவதில் புகழ் பெற்ற ஓவியர் ஆர். கே. லக்ஷ்மன் மிகவும் ஆபத்தான நிலையில் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

'டைம்ஸ் ஒப் இந்தியா' பத்திரிகையில் 50 ஆண்டுகளுக்கு மேலாக அவரது கேலிச் சித்திரங்கள் வெளியாகி வருகின்றன.

அவர் குணமடைந்து வரும் வரையில் அவர் வரைந்த ஓவியங்கள் அனைத்தையும் வெளியிட அந்த செய்தி நிறுவனம் முடிவெடுத்துள்ளது.

ஆர். கே. லக்ஷ்மன் அண்மையில் காலமான பிரபல இலக்கிய வாதியும், கதாசிரியருமான ஆர். கே. நாராயணனின் சகோதரராவார். 7,

## மலத்தியோன் விசிறப்பட்டது

அல்லைப்பிட்டிப் பகுதியில் மலேரியாநோய்த்தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக மலத்தியோன் விசிறப்பட்டது.

இப்பகுதியில் மூன்றுமாதத்திற்கு ஒருமுறை மலத்தியோன் விசிறப்பட்டு வருகின்றது.

மெலிஞ்சிமுனைப் பகுதியிலும் மலத்தியோன் விசிறப் பட்டமை குறிப்பிடத்தக்கது. [செ-75]

# சர்வதேச எயிட்ஸ் மகாநாடு

(லண்டன்)

எயிட்ஸ் நோய் தொடர்பான சர்வதேச மகாநாடொன்று அடுத்தவாரம் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் நடைபெறவுள்ளது.

ஐ நா. சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட இம் மகாநாட்டில் 180 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

உலகில் 3 கோடி 60 இலட்சம் பேருக்கு எயிட்ஸ் தொற்றுக் காணப்படுகின்றது.

முதலாவது எயிட்ஸ் நோயாளி கண்டு பிடிக்கப் பட்டு 20 வருடங்களின் பின்னரே இந்த உலகளாவிய எயிட்ஸ் மகாநாடு நடத்தப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. [செ]

# செச்சினியாவில் குண்டுகள் வெடிப்பு நால்வர் பலி 35 பேர்காயம்

செச்சினியாவின் பிரதான நகரான டேர்மெஸ்ஸில் சக்திவாய்ந்த 3 குண்டுகள் வெடித்ததில் நால்வர் பலியாகியதுடன், 35 பேர் காயமடைந்துள்ளனர்.

காரொன்றில் கெரில்லாக்களால் வைக்கப்பட்ட மேற்படி குண்டுகள் கடந்த செவ்வாயன்று வெடித்துள்ளன.

இம் மூன்று குண்டுகள் தவிர இன்னுமொரு சக்தி வாய்ந்த குண்டுவெடிக்கத் தவறியதால் ஏற்படவிருந்த பெரிய சேதங்கள் தவிர்க்கப் பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(உ-9)

## உலக தரிசன அறிவுப் போட்டி இல -11

முழுப்பெயர்: ____________________

முகவரி: ______________

______________

பிறந்த திகதி: ______________

போட்டியாளர் கையொப்பம்: ______________

பெற்ற புள்ளிகள்: __________

அறனறிந்து மூத்த அறிவுடை
யார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்
குறள்

வலம்புரி

## ஏமாற்றுவர் கவனம்

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிப் பீடமேறிய காலத்தில் இருந்து இனப்பிரச்சினையைத் தீர்ப்போம் என மேடைகளில் முழங்கிக் கொட்டினாலும் எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை

நோர்வேயின்சமாதான முயற்சிகள் கூட முற்றுப் பெறாத முடிவுகளாகவே உள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்கு முன்னர் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி இலங்கையில் இனப்பிரச்சினையே இல்லை என்று கூறிவிட்டது. ஐ தே. கட்சியின் கடைசி ஜனாதிபதி டி பி. விஜேயதுங்காவே இனப்பிரச்சினை இல்லை. மாறாகப் பயங்கரவாதப் பிரச்சினையே உண்டு எனக் கூறிய உத்தமராவார்.

இந்நிலையில் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிராகக் கொண்டுவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு தமிழ்க்கட்சிகள் ஆதரவு வழங்கி அரசைக் கவிழ்த்தால், ஐ. தே. கட்சி ஆட்சிப்பீடம் ஏறியதும் புலிகள் மீதானதடையைநீக்கி யுத்தநிறுத்தம் செய்து புலிகளுடன் பேசுவோம் என ரணில்விக்கிரமசிங்கா உறுதியளித்துள்ளதாகத் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட துணை தலைவர் வீ. ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கான தீர்வை பொது ஜன ஐக்கிய முன்னணியால் தான் காணப்பட வேண்டுமென்பதோ அல்லது ஐ. தே. கட்சி தான் காணவேண்டுமென்பதோ நிபந்தனை அல்ல. பிரச்சினைக்குயார் தீர்வுகாணமுன் வருகிறார்களோ அவர்களை ஆதரிப்பதிலும் எந்தத்தவறும் இல்லை.

ஆனால் 1983ல்யூலைக் கலவரத்தில் தமிழரைஅம் மணமாக சிதம்பரம் கப்பலில் அனுப்பி வைத்த ஐ. தே. கட்சி கொடுத்தவாக் குறுதி என்பதால், அதன் மீதான நம்பிக்கை வலுக் குறைந்ததாகவேயுள்ளது.

எல்லாவற்றையும் விட அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்குக் காரணம் அரசு இது வரை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படாமையே எனக்கூறினாலும்,ஐ.தே. கட்சிக்குள் எழுந்த உட்பூசலை தடுப்பதற்கான ஓர் வழியே இந்நம்பிக்கையில்லாப் பிரேரணையாகும்.

---

### பரமபிதா காட்டிய பாதை

# உண்மையை ஒருவர் உவந்தேற்பாரானால் மண்ணிலும் விண்ணிலும் மகிமை பெறுவார்.



"உண்மையா அது என்ன''? இது உரோமையின் ஆளுநனாக இருந்த பிலாத்து கூறியவார்த்தைகள்.' உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே எனது பணி; இதற்காகவே பிறந்தேன் இதற்காகவே உலகிற்கு வந்தேன். உண்மையைச் சார்ந்தவன் எவனும் எனது குரலுக்குச் செவிமடுக்கின்றான்'' இயேசு பிலாத்துமுன்னிலையில்கூறிய வார்த்தைகள்.இவ்வாறு இன்றும் கூறுவதற்கும் பதிலளிப்பதற்கும் ஆட்கள் இருக்கவே செய்கின்றார்கள். இயேசு கூறிய உண்மைக்குச் சாட்சியம் பகர்ந்து சமூக அநீதிகளைத் துணிவுடன் எடுத்துக் கூறி. அதற்காகவே சிரம்வெட்டப்பட்டு உயிர்நீத்த அதி உன்னத புனிதர் தான் புனித திருமுழுக்கு அருளப்பர், இன்று அவருடைய பிறப்பு விழாவை திருச்சபை நினைவு கூருகின்றது.

#### ஆளுக்கொருநீதி

உண்மை,வேப்பங்காயாகவும்,எட்டிப்பழமாகவும் இருக்கின்ற இக்காலத்திலே குறுக்குவழிகளும், குரோதமனப்பான்மையும் வளர்ந்து ஒருவரை மற்றவர் எவ்வாறு மட்டந் தட்டலாம் என்ற செயற்பாடுகளும் மலிந்துகாணப்படுகின்றன அன்று பிலாத்து கேட்ட உண்மையா! அது என்ன? என்றகேள்விகள் கேட்கப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. சமூகம் அநீதியை அரவணைக்கும் களமாகவும் பணத்துக்காகப் பிறர் சொத்துக்களை அநியாயமாக அபகரிக்கும் பிழைப்புகளும் நடக்கின்றன. அன்பைப் பற்றிச் சொல்பவர்கள் கூட அடுத்தவர் துன்பத்தைக் கண்டு கொள்ள மறுக்கின்றார்கள். ஆளுக்கொரு நீதி என்ற நிலை ஆன்மீகம் பேசுபவர்களிடமும் பின்பற்றப் படுவது.'உண்மைக்குச் சாட்சியம் கூறுவதே எனது பணி' என்ற இயேசுவின் வார்த்தைக்கு முரண்பட்டுக்காணப் படுகின்றது.

#### அருளப்பரின்சிரம் கொய்யப் பட்டது

திருமுழுக்கு அருளப்பர் இயேசுவுக்கு முன்னோடியாக இயேசுவின் பணிக்கு மக்களை ஆயத்தம் செய்யும் பிரமாணிக்கமுள்ள பணியாளனாகச் செயற்பட்டார். 'நற்கனிகொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும். (லூக்.3:9) என்றும் மக்கள் தங்கள் அநீதியான செயல்களில் இருந்து விலகி நல்வழியைக் கடைப்பிடிக்கப் போதனை செய்தார். அவருடைய போதனையால் மக்களும், வரிதண்டுவோரும்,படைவீரரும் கூட அவரின் வார்த்தையை ஏற்றுக் கொண்டனர். நெற்றிற்கண் திறப்பினும் குற்றம் குற்றமே என்பதைப் போல். ஏரோது அரசனின் தகாத நடத்தையைக் கண்டித்து அதை கைவிடுமாறு பகிரங்கமாக அறிவித்தார். அதற்கு அவருக்குக் கிடைத்த பரிசு திருமுழுக்கு அருளப்பரின் சிரம்கொய்யப் பட்டது.

#### அன்பால் ஆளப்படவேண்டும்

எம்முடைய வாழ்விலும் உண்மையின்படி வாழ்வதும், உண்மைக்குக் குரல்கொடுப்பதும் உலகம் விரும்பாத செயலாகும் அதனாலே இன்று துன்பங்களும்,அழிவுகளும், மரணங்களும் மலிந்து காணப்படுகின்றன 'நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை' அவ்வாறே உலகம் இயங்கிக் கொண்டு வருகின்றது. ஒவ்வொருவர் உள்ளமும் அன்பால் ஆளப்படவும் நன்மையால் பிரகாசிக்கவும்,நீதியால் நிறையவும் மன்னிப்பால்மலரவும் தியாக சேவையால் மணங்கமழவும் நாமே தீர்மானம்எடுப்பதால் நல்லவை நடக்க வழிபிறக்கும், இறைவன் துணையும் எமைத் தொடரும்.

அன்ரனி பீற்றர்

---

### சோதிட பலன்

# விஷு புத்தாண்டில் இராசி மாறும் கிரகங்கள் தருகின்ற பலன்கள் நல்லவையா? தீயவையா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

**இடபராசி(கார்திகை 2,3,4 ரோகிணி, மிருகசீரிடம் 1,2)**

இந்த இராசியன்பர்களுக்கு வியாழ பகவானின்,13 வரை, லக்கினத்திலும் (1 இல்) பின்னர் 2 ஆம் இடமாகவும்2002 வைகாசிவரை மேன்மையான பலன்களைத் தருவார். சனீஸ்வரன் ஏப்ரலில் 12இல் இலக்கினத்தில் 7½சனிநடுக்கூறாக விளங்கி பலன்கள் தருவார். ராகு, கேதுக்கள் முறையே 2 இலும் 8 இலும் இருந்து ஆண்டு முழுவதும் வாழ்வில் மாற்றங்களைச் செய்வார்கள்.

2001 யூன், 13 வரை குருவினால் சுகநன்மைகள் குறைவாகஇருக்கும். அதிகமானபிரயாசம், தொழில் வகையால் கஷ்டம், சிரமம். சிலவேளை நோய்ப்பிரச்சினை, அலைச்சல், மனக்குழப்பம், குடும்பத்தில் முரண்பாடுகள் போன்றவை இருந்து வரும்: காணி, வீடு, வாகனம்,கல்வி விசயங்களில் அலைச்சல், அதிக முயற்சி. ஓய்வில்லாமை விளங்கி வரும். சகோதர வகைச் செலவினங்களில் தகராறு நிலவும். மதிப்புக்குறைவான விசயங்கள் தோன்றி அகன்று விடும். நன்மை, நித்திரை சுகம் இவற்றில் தடங்கலிருக்கும். தொழில் விசயங்களில் அந்நியர், அடுத்தவர் பவங்களில் ஈடுபட்டோர் நஷ்டமும், கஷ்டமும், சிரமமும் அடைவார்கள். ஆனி, 13இல் குரு 2 இல் வரும் போது நன்மையான விசயங்கள் நடக்கத்து வங்கும்.

குரு 2ம் இடமாக இருந்து

சோதிடஞானி சண். மாஸ்டர்

குறுக்கீடுகள் இருந்து வரும். உறவினர், நண்பர்களின் உதவி கிடைக்காது. கணவன், மனைவி சுகக்குறைவு, சில போது அமைதியும், சிலருக்குத் தற்காலிக தொழில் விருத்தியுள்ளது. சுயதொழில் முயற்சிகளால் அதிக உடல் உழைப்பு இருக்கும். வெளிநாட்டு பயணத்திலிருப்போர் இடைத்தங்கலுடன் செலவினங்களையும் சந்திப்பார்கள். ஆனியிலிருந்து இவை நன்மையாக மாறும். சகோதரங்கள் நன்மை பெறுவார்கள். குழந்தை நன்மை சிலருக்கு வரவுள்ளது. நண்பர் சேர்க்கை கூட்டாளித்தனம் நன்மை இராது: குடி, புகைப் பழக்கம், போதை சுகானு தொழில், உத்தியோக நன்மை,பண விருத்தி, பலவித பொருட்பேறு ஆடை, ஆபரண இலாபச் சிறப்புக்கள, கடன் தீரல், வழக்கு வெற்றி மதிப்பு, புகழ் தோன்றுதல் காதல் நன்மையும் பிரச்சினையும், விவாகத்தடங்கல்போன்றவை விளங்கிவரும். குடும்ப வாழ்வில் பொதுவாக சந்தோஷம்திருப்திநிலவும்,சிலசமயம் குடும்பத்தில் செலவினங்கள் கூடிவரும், கடன் பிரச்சினைகள், நோய்கள் நீங்கிவிடும். காணி, வீடு, வாகனம் சிலர் வாங்குவார்கள், வறுமை, பற்றாக் குறை அகன்று சிலர் வசதிகளைப் பெற்று விடுவார்கள். கல்விக்குச் செலவுகள் அதிகரிக்கும். உணவு, ஓய்வு, நன்மையுள்ளது. தாயகப் பயணம், மற்றும் உறவுகளுடன் சேரும் பயணம் வெற்றியுடன் தோன்றும்.

சனீஸ்வரன் பலனால் ஏப்ரலில் 11 லிருந்து (லக்கினச் சனி) செலவினங்கள், மனக்கிலேசம், சில போது குறுக்கு வழி எண்ணங்கள், சகோதரர் மத்தியில் பிரச்சினை, வீடு திருத்தும் செலவுகள், குடும்பத்தில் தகராறு, அவசியத் தேவைகள் அதிகமாகத் தோன்றும் தொழில் தகராறு பிரச்சினை சிலருக்குஏற்படும். வயிறு, குடல் ரோகச் சிகிச்சை அமையும், சளி, கால் நோவு. தோன்றி அகலும், தொழிலைச் சிலர் கைவிடுவர். மனத்துன்பம் நிலவும். எண்ணெய், எள்ளு, கடற்றொழில் வகையால் வருமானம் கிடைக்கும்.

இராகு, கேது பலன் இரண்டில் இராகு8இல்கேது அமைவதால்குடும்பத தகராறு, வாகன நஷ்டம், அலைச்சல் நிலவும்வயிறு,குடல்,ரோகம், தொழில் முயற்சி, வழக்கு வெற்றியிருக்கும். 2002ல குடும்பச் சிக்கல், அமைதி குறைவு, குடும்பப் பொறுப்பு நிலவும்;

**மற்றக் கிரகங்கள் பலன் (2001 புரட்டாதிவரை பலன்)**

தொழிலிடங்களில் சிக்கல், விவசாய லாபம், மரம் தளபாட வகை லாபம் (ஆகஸ்ட்) காணிமனை தொழில வகையால் விருத்தியுள்ளது நீராடல்,நண்பர்கூட்டாளித்தனம் நட்டம் தரும் (செப்ரெம்பர்) வசீகர வாழ்வு, பெண்கள் உதவி, பண விருத்தி, கெட்டோர் சிநேகிதம், கல்வி விருத்தி,வாயு ரோகம் (ஆடி) இடமாற்றம அமையும்.

**2001 ஐப்பசி, 2002 சித்திரை வரை:**

குடும்பப் பிரச்சினை, விவசாய லாபம், புதியஸ்தானம், சுகசீவியம், அந்நியரால் மதிப்பு, பலவழி தொழில் நன்மை, வருமான மேன்மை, உயர்ந்த நிலை ஏற்படும்.

**உத்தியோகத்தர்களுக்கு:**

2001 ஜூன் வரை நன்மை குறைவு, அலைச்சல், ஜூன்13 இல் இருந்து மதிப்பு,பணமுன்னேற்றம், பதவியுயர்வு கிடைக்கும்,

**வியாபாரிகளுக்கு:**

2001 ஜூன் வரைநன்மை, லாபம் குறைவு, ஜூன் 13இல் இருந்து வியாபாரச் சிறப்பு, பலவழி லாபம் உள்ளது.

(2ம் பக்கம் பார்க்க)

---

இன்று நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம முருகனின் வருடாந்த மஹோற்சவம்.

### வரமளித்து காத்திருவாய்

நீர்வையெம் பதிமேவு முருகனவன்
நிகரில்லா அருள்பொழியும் அண்ணலவன்
மாதிருவர் கரம்பிடித்த மணாளனவன்
மாசில்லா வரம் நல்கும் மயில்வாகனன்!

சூரனைக் கொன்றொழித்த ஆறுமுகன்
சுகமளித்துக் காத்திடுவான் அடியவரை
குறை தீர வேண்டுகிறோம் வேலவனே.
கும்பிடுவார் மனம் நிறையும் காவலனே

நீர்வையூர் வெ. சுதர்சினி

# மதத்தலைவர்களும் வர்த்தகர்களும் அரசுக்கும் ஐ.தே.கட்சிக்கும் அழுத்தமே கொடுக்க வேண்டும்

## பேராசிரியர் ஜீ எல் பீரிஸ் கோரிக்கை

நாட்டினைக் குட்டிச் சுவராக்கிக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினையைத்தீர்த்து வைப்பதற்கு வர்த்தக சமூகத்தினரும், மதத் தலைவர்களும் ஒன்றிணைந்து ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், எதிர்க்கட்சியான ஐக்கியதேசியக்கட்சிக்கும், அழுத்தம்கொடுக்கவேண்டும்என்று அமைச்சர் பேராசிரியர் ஜீ எல் பீரிஸ் கூறியுள்ளார்.

இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் 66வது வருடாந்த மகா நாட்டில் உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இனப்பிரச்சினைக்குநீதியான தீர்வொன்றை காண்பதற்கு பிரதானஇருகட்சிகளும் இணைந்து செயற்படும். திட்டம் ஒன்றைத் தயாரிக்க சமயத் தலைவர்களும் வர்த்தக சமூகத்தினரும் நிர்பந்திக்க வேண்டும்.

ஐக்கியதேசியக்கட்சிகடந்தகாலப் பிரச்சினைகளை மறந்துவிட்டு நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து பாதுகாக்கவும், அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்லவும் நாட்டின் தற்போதய அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கவும் முன்வர வேண்டும்எனவும் அவர்கேட்டுக் கொண்டார், (ந-5)

# அமைச்சர் பதவியை நீக்கியதற்கு கூறும் காரணம் அபத்தமானது

## நிராகரிக்கிறார் ரவூப்ஹக்கீம்

(கொழும்பு)

அமைச்சரவையிலிருந்து தன்னை நீக்கியமைக்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்த காரணத்தை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நிராகரித்துள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு எதிராகவோ அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்புக்கு பங்கம் விளைவுக்கும் எதேட்சையான போக்கிலோ நான் செயற்படவில்லை. இவ்வாறு என் மீது அபத்தமான பழி சுமத்துவது தவறானதென ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு பல வாக்குறுதிகளை முன்வைத்தே ஆட்சிக்கு வந்தது அதில் முஸ்லிம் மக்களின் வாக்குறுதிகளை நிறைவேற்றாததால் மக்கள் எனக்கு நெருக்குதல் கொடுத்தனர். இதனால் நான் அதனை ஜனாதிபதியிடம் மக்கள் கோரிக்கையாக முன்வைத்தேனே தவிர அரசுக்கு எதிராகவோ கூட்டுப்பொறுப்பை உடைத்தோ செயற்படவில்லையென்றும் தெரிவித்துள்ளார். (ந)

# நல்லை ஆதீனத்தில் குருபூசை

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில், மாணிக்கவாசகர் சுவாமிகளின் குருபூசை நாளை காலை 8 மணிக்குதிருவாசகமுற்றோதலுடன் ஆரம்பமாகும்.

நண்பகல் 12 மணிக்கு அபிஷேக பூசைகளும் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் நடைபெற்று. மாலை 5.00 மணிக்கு சுவாமிகளின் வீதியுலாவும் நடைபெறும்; (இ)

# திருமலை அணியிடம் யாழ் அணி தோற்றது

கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபையின் ஏற்பாட்டில் 19 வயதுக்குட்பட்டோருக்கான மாவட்ட அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் கிரிக்கெற் போட்டிகளில் நேற்று இடம்பெற்ற போட்டியில் திருமலை அணியிடம் யாழ் மாவட்டஅணி தோல்வியைத் தழுவியது.

முன்னதாக 21ம் திகதி மட்டக்களப்பு அணிக்கெதிராக ஆடியயாழ்அணி வெற்றிபெற்றிருந்தது. 27 ஓவர்களில்சகல விக்கட்டுகளையும் இழந்த மட்டு அணி 77 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. பதிலளித்தாடிய யாழ் அணி 24 ஓவர்களில் மூன்று விக்கட்டுகளை இழந்து வெற்றிபெற்றது.

22ம் திகதி வவுனியா மாவட்ட அணியை எதிர்த்தாடிய யாழ் அணி 50 ஓவர்களில 8 விக்கெட்டுக்களை இழந்து 281 ஓட்டங்களை பெறறது. பதிலுககாடிய வவுனியா அணி 50 ஓவர்களில் 7 விக்கட்டுகளை இழந்து 231 ஓட்டங்களைப் பெறறு யாழ் அணியிடம் தோல்விகண்டது.

இச் சுற்றுப்போட்டியின் இறுதியாக மட்டு, திருமலை அணிகள்மோதவிருக்கின்றன. இபபோட்டிகளில் திறமையை வெளிப்படுததிய வீரர்கள் வடவலய அணிக்குத் தெரிவு செய்யப்படுவார்கள். (ந-8)

# வாகன விபத்தில் உதயன் ஆசிரியர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலுப்பையடிச்சந்தியில் நேற்றுக்காலை பிக்கப்வாகனமும்மோட்டார் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில், உதயன் பத்திரிகை ஆசிரியர் கானமயில்நாதன் (வயது-58), இ சிவநேசன் [வயது-34] ஆகிய இருவரும் காயமடைந்த நிலையில் யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பத்திரிகைக் காரியாலயத்துக்கு செல்வதற்காக, வீட்டிலிருந்து மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த சமயமே இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

இவ்விபத்து நடந்த இதே இடத்தில் உதயன் பத்திரிகை நிர்வாக முகாமையாளரும் விபத்துக்குள்ளாகியமைகுறிப்பிடத்தக்கது. (இ)

# நள்ளிரவிலும் ஷெல்வீச்சு

[யாழ்ப்பாணம்]

யாழ் குடாக்கடல்பகுதியை நோக்கி நேற்றிரவு முதல் நள்ளிரவுக்குப் பின்பும் சரமாரியான ஷெல் தாக்குதல்களை படையினர் மேற் கொண்ட வண்ணமிருந்தனர்.

குருநகர் தொடர் மாடிப் பகுதி கொழும்புத் துறை துண்டி ஆகியஇராணுவநிலைகளிலிருந்து கல்முனை, பூநகரிக்கடல் பகுதிகளைநோக்கி இச்செல் தாக்குதல்கள் மேற் கொள்ளப்பட்டது.

இதன் போது ஏற்பட்ட சேதவிபரம் குறித்து எதுவும் அறியவில்லையெனினும்கரையோரப் பகுதிமக்கள் பீதியடைந்துள்ளனர். [ம]

# 22 பவுண் நகைகள் மீட்பு

[யாழ்ப்பாணம]

அறுகுவெளி தனங்கிளப்புப் பகுதியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த தங்க நகைகள் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பரமநாதன் மகேஸ்வரன் என்பவரது வீட்டில்புதைத்து வைக்கப்பட்டிருந்த 22பவுண் தங்கநகைகளே மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி நகை மீட்புப்பணியை ஈ. பி. டி. பியின் தென்மரட்சியி அமைப்பாளர் சாளஸ்அலெக்சாண்டர் மற்றும் கட்சிஉறுப்பினர் சிறி ஆகியோர் படையினரின் உதவியுடன் மேற் கொண்டனர். [ந-5]

# சிகிச்சைக்காக 87 நோயாளர் வவுனியா வந்தனர்

(கொழும்பு)

இராணுவக்கட்டுப் பாடற்ற பிரதேசங்களான கிளிநொச்சி முல்லைத்தீவு, மன்னார்ஆகிய பிரதேசங்களில் இருந்து கடந்த வாரம் 87 நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக வவுனியா வைத்திய சாலைக்கு வந்துள்ளதாகவும், இதேகாலப்பகுதியில் சிகிச்சை பெற்ற 69நோயாளர்களஇராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களிற்கு திரும்பி உள்ளதாகவும் விசேட ஊடகத்தகவல் நிலையம் அறிவித்துளளது. (ந-9)

## மூன்று . . .

திர ஆகிய மூன்று இனவாத அமைப்புகளே ஒன்றிணைந்துளளன

தமிழீழ விடுதலைப்புலிகளின்தடையை நீக்கக்கூடாது அவர்களுடன்பேச்சுவார்த்தை நடத்தக்கூடாது அரசைமப்பினை மீண்டும் பாராளுமன்லத்தில் சமர்ப்பிக்கவோ நாடுபிளவுபடுவதை அனுபதிக்கவோ கூடாதுதென்ற நான்கு அம்சக்கோரிக்கைகளை வலியுறுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்காகவே இந்த மூன்றுகட்சிகளும் ஒன்றிணைந்துள்ளன. இ[

## ஜனாதிபதி-ரணில்

ஜனாதிபதி-ரணில் பேச்சு வார்த்தைகள் மிகவும் இரகசியமாக இருசாராலாலும் வைக்கப்பட்டுள்ளதால் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் எதுவும் இடம் பெறலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவால் எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளிக்கப்பட்ட முக்கிய ஆவணம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சிப் பேச்சாளர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கிடம் வலம்புரி தொடர்பு கொண்டு கேட்ட போது ஜனாதிபதியால் ரணிலிடம் ஆவணம் ஒன்று கையளிக்கப்பட்டதை அவர் ஒப்புக் கொண்டார்.

எனினும் ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் எதுவென வெளிப்படையாக அறிய முடியாது போனாலும் அதில் நோர்வேயுடனான சமாதானப் பேச்சுக்கள் அடங்கிய விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கலாமென அரசியல் வட்டாரங்கள் ஊகம் வெளியிட்டுள்ளன [வ]

## 8000 விடுதலைப் . . .

கனடாவின் ரொறன்ரோ மற்றும் ஒட்டவா மற்றும் விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளதாக புலனாய்வுப்பிரிவின் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன

இதேவேளை நிதி சேகரித்தல் மற்றும் அகதி என்ற போர்வையில் தமிழர்களை கனடாவுக்கு வரவழைத்தல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் உலகத் தமிழர் பேரவையின் சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரை கனேடிய பொலிசார் விசாரணைக்கு உட்படுத்தி வருவதாகவும் ரொறன்ரோ செய்திகள் தெரிவிக்கின்றன; (இ)

## குடிசன . . .

ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயம் இலங்கையில் இருபது வருடங்களுக்கு பின்னர் நடைபெறவுள்ள தேசிய குடிசன மதிப்பீட்டு பணிக்கு உதவ முன்வந்துள்ளதாகவும் இதற்காக 417 மில்லியன் ரூபா செலவாகுமென்றும் கூறினார்.

இது இவ்வாறிருக்க வடக்கு கிழக்குப் பகுதிகளில் யுத்தம் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாக உள்ளனர். இந்நிலையில் இப்பகுதிகளில் குடிசன மதிப்பீட்டுப் பணிகளை நடத்தவேண்டாமென பல தரப்பாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (இ

## ஜே வி. பி. யின் . . .

வதாககொழும்புத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுப் பி.பகல்2மணிக்கு ஆரம்பமான இக்கூட்டம் நள்ளிரவு வரை நீடித்த போதும் இச் செய்தி எழுதும் வரை முடிவுகள் எதுவும் அறிவிக்கப் படவில்லை.

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் ஜே; வி. பியின் நிலைப்பாடுஎத்தகையதுஎன்பதைஅறிவதில் சகலஅரசியற் கட்சிகளும் ஆர்வமுடன் எதிர் பார்த்துள்ளன, (வ]

## அரசு - புலிகள் . . .

அவர் மேலும் கூறுகையில் ஒரு காலத்தில் யுத்தம் முப்படையினரினதும் மற்றும் பொலிசாரினதும் நடவடிக்கையுடன் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது, ஆனால் இன்று யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்து சமாதானத்தை ஏற்படுத்துவதில் மக்கள் விழிப்பாக உளளனர்.

இந்நிலையில் நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் பேச்சுக்குஇணங்கும் போது, அதனை இராணுவம் ஒருபோதும் எதிர்க்கவோ' தடுக்கவோமாட்டாதென்றும் அவர் மேலும் கூறியுள்ளார். இ)

ராஜா
யாழ்ப்பாணம்
லக்கிஸடார் அஜித்
(9 வேடங்களில)
வசுந்தராதாஸ்,
மீனா, நக்மா
மற்றும் பலர் நடித்த
STR பிலிப்ஸ்
சிட்டிசன்
தினசரி: 10-30, 2-00
5 00 [பு நே]
(கி-2125)

அகில இலங்கை தமிழ்க் காங்கிரசின்
கருத்தரங்கு
இடம்: யாக்கரை கரவெட்டி கிழக்கு
காலம்: 24 - 06 - 2001 இன்று ஞாயிறு
காலை 9.00 மணி
அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்;
அ. விநாயகமூர்த்தி பா. உ
தலைவர்,
அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ்
(கி 2138)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
விஜயகாந்,
மீனா
நடித்த
சேதுபதி IPS
தினசரி [ரீலஸ்]
11-00, 2-30[பு. நே]
(சனி, ஞாயிறு தினங்களில 6 மணிககு விசேட
காட்சி காண்பிக்கப்படும்
(3264)

30 ஆண்டு காலமாய் குன்றாத தரம் வாய்ந்த
சுகாதார முறைபபடி உணவிற்கும் வைத்தியர்களுக்கும்
விஷேசமாகத் தயாரிககப்பட்டது;
சுத்தமான
வி.எஸ்.பி, நல்லெண்ணெய்
தயாரிப்பாளரும், ஏகவிநியோகஸ்தரும்
பரிமளா ஸ்ரோர்ஸ்
26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(கி-1986)

இப் பத்திரிகை "வலம்புரி" அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001ம் ஆண்டு யூன் மாதம் 24-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.